## இலங்கை அரசாங்க மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம் - 2015

---

இலங்கை அரசாங்க மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) பிரிவு மற்றும் 1957 இன் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனங்கள் அதிகாரச்சட்டத்தின் 29 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த அறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக் கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

இலங்கை அரசாங்க மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமம்

இலங்கை கணக்கீட்டு நியமம் 08 இன் படி நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான பயன்படு ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யப்படாததன் காரணமாக ரூபா 94,841,186 கிரயத்திலான நிலையான சொத்துக்கள் முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்டிருந்த போதிலும், தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வந்தன. அதன் பிரகாரம் மதிப்பீட்டு வழுவினை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது மாதாந்த விற்பனை இலக்கை பூர்த்தி செய்வதற்கு தவறிய விநியோகத்தர்களிடமிருந்து மீள அறவிடப்பட வேண்டிய ரூபா 90,933 ஆன கழிவினை 2016 மார்ச் 16 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கு கூட்டுத்தாபனம் தவறியிருந்தது.

(ஆ) 2010 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 633,049 ஆன பெறுமதி சேர் வரி உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4 போதியளவு அதிகாரத்தினால் உறுதிப்படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கம்பனிகளுடன் கூட்டு ஒத்துழைப்புக்களை மேற்கொள்ளும் கொள்கை ரீதியான தீர்மானத்திற்கு அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாமல் மீளாய்வாண்டில் 5 சந்தர்ப்பங்களின் போது கூட்டு ஒத்துழைப்புக்கள் மேற்கொள்வதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொண்டு அதற்காக ரூபா 115,000 தொழில்துறைக் கட்டணம் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) பணிப்பாளர் சபை அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாமல் மீளாய்வாண்டில் ரூபா 8,048,368 கிரயமான நடைமுறையல்லாத சொத்துக்கள் கைதவிர்க்கப்பட்டிருந்தன.

### 2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றிற்கான தொடர்பு | இணக்கமின்மைகள் |
| --- | --- |
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | |
| (i) நிதிப் பிரமாணம் 371 2 (இ) | மீளாய்வாண்டில் வழங்கப்பட்டிருந்த ரூபா 247,403 கூட்டுத்தொகையான 03 உப கட்டுநிதிகள் 01 மாதம் முதல் 11 மாதங்களுக்கு இடைப்பட்ட கால தாமதத்தின் பின்னர் தீர்க்கப்பட்டிருந்தது. |
| (ii) நிதிப் பிரமாணம் 571 (2) | மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட வைப்புச் செய்யப்பட்ட திகதி முதல் 2 ஆண்டுகளை விஞ்சிய ரூபா 2,238,121 கூட்டுத்தொகையான பிணை முறிகளை தீர்வுசெய்வதற்கோ அல்லது அரசின் வருமானத்திற்கு எடுக்கவோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) கொள்வனவு வழிகாட்டல் கோவையின் 9.3.1 (ஆ) பந்திக்கு 2010 செப்தம்பர் 06 ஆந் திகதி வெளியிட்டிருந்த 19 ஆவது மேலதிகம் | மோட்டார் வாகன பழுதுபார்த்தல் செலவினம் ரூபா 200,000 இனை விஞ்சும் போது அதற்காக வரிசை அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அதற்கு முரணாக மீளாய்வாண்டில் வாகனமொன்றைத் திருத்தியமைப்பதற்காக ரூபா 279,087 தொகை செலவிடப்பட்டிருந்தது. |
| (இ) சிற்றூழியர் ஆட்சேர்ப்பு நடைமுறை | பத்திரிகை அறிவித்தல் வெளியிட்டு பதவி வெற்றிடங்கள் பிரசித்தப்படுத்தப்பட்டு நேர்முகப் பரீட்சை நடாத்தி தகைமைகளுக்காக புள்ளிகளை வழங்கி தெரிவுசெய்யப்பட்ட நபர்கள் ஆட்சேர்க்கப்பட வேண்டிய போதிலும், அதற்கு முரணாக மீளாய்வாண்டில் 13 சிற்றுழியர்கள் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். |
| (ஈ) நிறைவேற்றுத் தரமல்லாத ஊழியர்களின் ஆட்சேர்ப்பு நடைமுறை | பத்திரிகை அறிவித்தல் வெளியிட்டு பதவி வெற்றிடங்கள் பிரசித்தப்படுத்தப்பட்டு எழுத்துப் பரீட்சையொன்றும் நேர்முகப் பரீட்சையொன்றும் நடாத்தப்பட்டு தகைமைகளுக்காக புள்ளிகளை வழங்கி தெரிவுசெய்யப்பட்ட நபர்கள் ஆட்சேர்க்கப்பட வேண்டிய போதிலும், அதற்கு முரணாக மீளாய்வாண்டில் சிறாப்பர் பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டிருந்தது. |
| (உ) 2009 மார்ச் 09 ஆந் திகதிய டீஎம்எஸ்/ஈ4/10/4/090/2 ஆம் இலக்க சுகாதார செயலாளருக்கு முகவரி இடப்பட்ட முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் கடிதம் | |
| (i) பந்தி இலக்கம் 02-01 | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்காத வகையில் கூட்டுத்தாபனத்தின் நிறைவேற்றுத் தரம் மற்றும் நிறைவேற்றுத் தரமல்லாத உத்தியோகத்தர்களுக்கு தூரத்தின் அளவினைக் கருத்திற் கொள்ளாமல் 2009 ஆம் ஆண்டு முதல் முறையே மாதாந்தம் ரூபா 4,700 மற்றும் ரூபா 3,000 போக்குரவரத்துப் படிகள் செலுத்தப்பட்டிருந்தன. |

(ii) பந்தி இலக்கம் 02-02 — சுற்றறிக்கையின் பிரகாரம் பதவியணி அங்கத்தவர்களுக்கு மாதாந்த உற்பத்தி ஊக்குவிப்பு படியாக ரூபா 4,000 மாத்திரம் செலுத்த முடியுமான போதிலும் அதற்கு இணங்காத வகையில் 2011 யூலை 01 ஆந் திகதி முதல் ரூபா 12,000 தொகையான மாதாந்த உச்ச அளவின் கீழ் சகல பதவியணியினர்களுக்கும் உற்பத்தி ஊக்குவிப்பு படி செலுத்தப்பட்டிருந்த காரணத்தினால் மீளாய்வாண்டில் ரூபா 12,292,265 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

(ஊ) 2009 நவம்பர் 13 ஆந் திகதிய 438 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை

(i) அரச நிறுவனங்களில் குவித்து வைக்கப்பட்டிருக்கும் கைதவிர்க்கப்பட வேண்டிய பொருட்கள் துரிதமாக கைதவிர்க்கப்பட வேண்டிய போதிலும் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முழுமையாக பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட மற்றும் பயன்படுத்த முடியாத ரூபா 50,103,387 கிரயத்திலான நடைமுறையல்லாத சொத்துக்களை கைதவிர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 2015 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் பயன்படுத்தப்பட முடியாத ரூபா 15,262,967 கிரயத்திலான மூலப்பொருள் இருப்புக்கள் மற்றும் ரூபா 1,820,250 மொத்த கிரயத்திலான பொதியிடல் பொருட்கள் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்த போதிலும், அவற்றை முறையாக கைதவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டியிற்கான கூட்டுத்தாபனத்தின் நிதி விளைவுகள் ரூபா 262,323,747 மிகையொன்றாக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 183,848,683 ஆக இருந்தமையால், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் மிகை ரூபா 78,475,064 தொகை அதாவது 43 சதவீத அதிகரிப்பொன்று தென்பட்டது. விற்பனைக் கிரயம் ரூபா 216,092,507 ஆலும் வரிச் செலவினம் ரூபா 69,544,789 இனாலும் அதிகரித்திருந்த போதிலும், விற்பனை வருமானம் ரூபா 342,257,122 ஆல் அதிகரித்திருந்தமை மேற்படி நிதி விளைவுகளின் அதிகரிப்பிற்கு பிரதான காரணங்களாக இருந்தன.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2011 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை தொடர்ச்சியான நிதி மிகையொன்று தென்பட்ட போதிலும், அது வருடாந்தம் தளம்பல் அடைந்திருந்தது. ஊழியர் ஊதியம், அரச வரி மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வினைக் கருத்திற் கொள்ளும் போது கூட்டுத்தாபனத்தின் 2011 ஆம் ஆண்டின் போது ரூபா 551,241,277 ஆன பங்களிப்பு 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 814,843,103 வரை 6 சதவீதத்திலிருந்து 49 வரையான சதவீதத்திற்கிடையே தளம்பலுடன் அதிகரித்திருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

மீளாய்வாண்டினதும் முன்னைய ஆண்டினதும் நடைமுறை விகிதம் 9:1 மற்றும் 11:1 ஆகவும் விரைவு விகிதம் 5:1 மற்றும் 8:1 ஆகவும் காணப்பட்டதால் மிகை தொழிற்பாட்டு மூலதனம் ஆக்கபூர்வமாக பயன்படுத்தப்படவில்லையென்பது அவதானிக்கப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1987 இன் 04 ஆந் திகதிய 456/21 ஆம் இலக்க இலங்கை சனநாயக குடியரசின் அதிவிசேட வர்த்தமானியின் பிரகாரம் மருந்துகளை உற்பத்தி செய்தல், தயாரித்தல், களஞ்சியப்படுத்தல், பொதியிடல், மீள் உற்பத்தி செய்தல், மருந்துகளை உற்பத்தி செய்வதற்கும் தயாரிப்பதற்கும் தேவையான தொழில்நுட்ப ஒத்துழைப்பினை வழங்குதல், மருந்துகள் விஞ்ஞானம் மற்றும் மருந்துப் பொருட்கள் தொடர்பான ஆய்வுகள் மற்றும் மருந்துகளை தரப்படுத்தல், உற்பத்தி செய்த மருந்துகளை சந்தைப்படுத்துதல் என்பன கூட்டுத்தாபனத்தின் பிரதான நோக்கங்களாகும். மருந்துகள் விஞ்ஞானம் மற்றும் மருந்துப் பொருட்கள் தொடர்பான ஆய்வுகள் மற்றும் மருந்துகளை தரப்படுத்தல் போன்ற நோக்கங்களை போதியளவில் நிறைவேற்றுவதற்கு கூட்டுத்தாபனம் தவறியிருந்தது.

(ஆ) 2015 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், மாதிரியின் பிரகாரம் செயன்முன்னேற்ற அறிக்கை தயாரிக்கப்படாதிருந்தமையால் செயன்முன்னேற்றம் தொடர்பாக முறையான மீளாய்வொன்றை மேற்கொள்ள முடியாதிருந்தது.

### 4.2 செயற்பாட்டு நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) லேபல் காணமல் போனமையால் வகை மற்றும் உள்ளடக்கங்கள் இனங்காண முடியாமை காரணமாக மருந்து உற்பத்திக்காக விநியோகிக்க முடியாத மூலப்பொருட்களின் மொத்தப் பெறுமதி ரூபா 115,498 தொகை மீளாய்வாண்டின் போது இலாபத்திற்கு எதிராக பதிவழிக்கப்பட்டிருந்தது. எனினும் லேபல் காணால் போனமை தொடர்பில் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களை இனங்கண்டு அவர்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிவல்லை.

(ஆ) மூலப்பொருள் மற்றும் பொதியிடல் பொருட்கள் என்பவற்றிற்காக போதியளவில் இருப்பு மட்டங்கள் பேணப்படாமையால் பரீட்சிப்பிற்கு உட்படுத்தப்பட்ட 88 வகையான மூலப்பொருட்களில் 8 வகை இருப்புக்கள் தேவைப்பாட்டினை 84 வீதம் முதல் 270 சதவீதத்திற்கு இடைப்பட்ட அளவில் மிகைத்து கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், இரண்டு வகையான பொதியிடல் பொருட்கள் இருப்புகள் பூச்சியமாக இருந்தன. காலாவதியான இருப்பின் அளவு அதிகரித்தல் மற்றும் தொழிற்படு மூலதனப் பற்றாக்குறை ஏற்படக்கூடிய போக்கு உட்பட உற்பத்தி தாமதமாவதற்கும் அவசர கொள்வனவிற்காகவும் இந்நிலைமை காரணமாக இருக்குமென கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(இ) மூலப்பொருள், பொதியிடல் பொருட்கள் மற்றும் குளிசைகளின் மேலுறைகள் என்பவற்றில் இருப்பு பற்றாக்குறை காணப்படல், போதியளவு இயந்திர இயலளவு காணப்படாமை, உற்பத்தி செயற்பாட்டினுள் தொழில்நுட்ப வழுக்கள் காணப்படல் போன்ற காரணங்கள் அடிப்படையில் மருத்துவ வழங்கல் பிரிவினால் மீளாய்வாண்டிற்காக கட்டளையிடப்பட்டிருந்த ரூபா 447,494,529 பெறுமதியான மருந்துகளில் ரூபா 710.06 மில்லியனான 20 வகையான மருந்து அலகுகளை மீளாய்வாண்டின் போது வழங்குவதற்கு தவறியிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த சந்தைப்படுத்தல் திட்டத்தின் பிரகாரம் 84 மருந்து வகைகளில் ரூபா 2,152 மில்லியன் இலக்கிடப்பட்ட விற்பனையில் ரூபா

354.19 மில்லியனான 10 மருந்து வகைகளில் இலக்கினைப் பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தமை செயன்முன்னேற்ற அறிக்கைகளிலிருந்து உறுதிப்படுத்தப்பட்டது.

(உ) முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக விநியோகத்தர்களுக்கு விற்பனை செய்யப்பட்ட 16 மருந்துப் பொருள் வகைகளின் விற்பனை அளவு மீளாய்வாண்டில் 7 சதவீதம் முதல் 75 சதவீதம் வரையான வீச்சில் குறைவடைந்திருந்தது. அதன் காரணமாக விற்பனை வருமானம் ரூபா 39,186,940 ஆல் அதாவது 6.6 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

(ஊ) மருத்துவ வழங்கல் பிரிவிற்கு மருந்துகள் விற்பனை செய்யும் போது கிரயத்தில் 12 சதவீத இலாப எல்லையொன்றுடன் விலையைத் தீர்மானித்தல் கொள்கையாக இருந்த போதிலும், அதனை விடக் குறைந்த இலாப எல்லையுடன் 13 மருந்து வகைகள் விலை நிர்ணயிக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டிருந்த காரணத்தினால் மீளாய்வாண்டின் இறுதி 06 மாதங்களில் மாத்திரம் தெரிவுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட 43 மருந்து வகைகளில் விற்பனை வருமானம் ரூபா 1,929,118 ஆல் இழக்கப்பட்டிருந்தமை கண்டறியப்பட்டது.

## 4.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேற்கொள்ளப்பட்டிருந்த பௌதீக இருப்பு மெய்மையாய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட ரூபா 851,978 ஆன இருப்பு மிகைகள் மற்றும் ரூபா 148,573 இருப்புக் குறைவுகள் தொடர்பாக கணக்குகளில் சீராக்கம் செய்யப்பட்டிருந்த போதிலும், அவை ஏற்படுவதற்குரிய காரணம் இனங்காணப்பட்டு தீர்வை எட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் கடன்பட்டோரிடமிருந்து கடன் சேகரிக்கும் காலம் 16 நாட்களாக இருந்த போதிலும், 50 நாட்கள் கடன் கால எல்லையாக வழங்கப்பட்டிருந்தது. அக்கடன் காலப்பகுதியையும் விஞ்சி 2 சந்தர்ப்பங்களில் ரூபா 1,176,684 தொகையான கடனைத் தீர்வு செய்வதற்கு இடமளிக்கப்பட்டிருந்த போதிலும், வட்டி அறவீட்டிற்காக புதிய நடைமுறையொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.4 இனங்காணப்பட்ட நட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 512,295 தொகை செலவிடப்பட்டு கொள்வனவு செய்யப்பட்டிருந்த "Saccharin Sodium" என்ற மூலப்பொருள் 250 கி.கிராமில் 100 கி.கிராம் காலாவதியாவதற்கு முன்னர் பயன்படுத்தப்படாத காரணத்தினால் ஏற்பட்டிருந்த நட்டம் ரூபா 239,156 ஆக இருந்தது.

(ஆ) மீளாய்வாண்டில் சில மருந்து உற்பத்திகளை கைவிட்டமையால் அதற்காக கொள்வனவு செய்யப்பட்ட மூலப்பொருட்களை பாவனையிலிருந்து அகற்றுதல், காலாவதியாவதற்கு அண்மித்ததாக காணப்பட்ட மூலப்பொருட்கள் தரப்பரிசோதனையில் வெற்றிபெறாமை போன்ற காரணங்கள் அடிப்படையில் பயன்பாட்டிக்குப் பொருத்தமற்றதென இனங்காணப்பட்டிருந்த ரூபா 3,798,626 மொத்தக் கிரயமான மூலப்பொருள் மற்றும் பொதியிடல் பொருட்கள் இலாபத்திற்கு எதிராக பதிவழிக்கப்பட்டிருந்தன.

(இ) 2015 சனவரி 06 ஆந் திகதி கொழும்பு 07 தர்மபால மாவத்தை என்ற இடத்தில் ஆரம்பிக்கப்பட்டிருந்த மருந்துகள் மொத்த விற்பனை நிலையத்தின் மொத்த நட்டம் ரூபா 985,113 ஆக இருந்ததுடன், அது 2015 ஏப்ரல் மாதத்திலிருந்து மூடப்பட்டிருந்தது.

## 4.5 தாமதமான செயற்திட்டங்கள்

ரூபா 400,000,000 மொத்த மதிப்பீட்டுக் கிரயத்தின 03 கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கும் மீளாய்வாண்டின் போது அதில் ரூபா 100,000,000 தொகை செலவிடுவதற்கும் பணிப்பாளர் சபை அங்கீகாரம் வழங்கியிருந்த போதிலும், அதற்காக அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 2015 மே மாதம் அளவில் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும், 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரை இரண்டு கட்டிடங்களுக்காக மதியுரையாளர்கள் நியமித்தல் மாத்திரம் இடம்பெற்றிருந்தது.

## 4.6 பதவியணியினர் நிர்வாகம்

2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் 08 நிறைவேற்றுத்தரமுடைய பதவிகளும், 12 நிறைவேற்றுத் தரமல்லாத பதவிகளும் 02 சிற்றூழியர் பதவிகளும் வெற்றிடங்களாக காணப்பட்ட போதிலும், ஏனைய நிறைவேற்றுத்தரமுடைய பதவி 01 நிறைவேற்றுத் தரமல்லாத 07 பதவிகள் மற்றும் 32 சிற்றூழியர் பதவிகள் என்பவற்றிற்காக அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை மிகைத்து 03 பேர் நிரந்தர அடிப்படையிலும் 37 பேர் ஒப்பந்த அடிப்படையிலும் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர்.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

## 5.1 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வுத் திட்டத்திற்கு உள்ளடக்கப்பட்டிருந்த மொத்த செலவினத்தில் 78 சதவீதம் உள்ளடக்கும் நிலையான சொத்துக்கள் மற்றும் மூலப்பொருட்கள் கொள்வனவு என்பவற்றிற்குரிய உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 5.2 கொள்வனவுத் திட்டம்

ஒவ்வொரு கொள்வனவினதும் பூர்த்தி செய்வதற்கு இலக்கிடப்பட்ட திகதிகள் மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பிரதான கொள்வனவுத் திட்டத்தில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன், கொள்வனவு கால அட்டவணையும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

18 வகையான மூலப்பொருட்களின் மதிப்பிடப்பட்ட அளவினை மிகைத்து 27 சதவீதம் முதல் 1400 சதவீதம் வரையான வீச்சினுள் கொள்வனவு மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் நடைமுறைச் சாத்தியமான மதிப்பீடு தயாரிக்கப்படாதிருந்தமையும் 62 மொத்த செலவின விடயங்களில் 17 உருப்படிகளில் மதிப்பிடப்பட்ட மற்றும் உள்ளவாறான செலவினங்களுக்கிடையே 50 சதவீதம் முதல் 167 சதவீதம் வரையான முரண்கள் அவதானிக்கப்பட்டமையினால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லையென்பது அவதானிக்கப்பட்டது.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது கூட்டுத்தாபனத் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

| **முறைமைகளும் கட்டுப்பாட்டுத் துறைகளும்** | | **அவதானிப்புக்கள்** |
|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு | சொத்துக்களை கைதவிர்ப்பதற்காக முறையான அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாமை மற்றும் சொத்துக் கைதவிர்ப்பு செயற்திறனாக மேற்கொள்ளப்படாமை |
| (ஆ) | இருப்புக் கட்டுப்பாடு | தேவையான மட்டத்தில் இருப்பினை பேணாமை மற்றும் இருப்பு விநியோக குறிப்புக்கள் பேணப்படாமை. |